**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 384/2024**

**Prosecution witness : அ.சா. 9** **Date : 16.03.2026.**

| | |
|---|---|
| **Name : செந்தில்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. ) (Accused 2 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் இந்திராநகரில் குடியிருந்து பெயிண்டராக வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.7** ஆகும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.8** ஆகும்.அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 27.04.2021 ம் தேதி காலை 09.30 மணிக்கு நான் மற்றும் ராஜேந்திரன் இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

3) சம்பவ இடமான  வாதி வீடு முன்பாக வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) கடந்த  27.04.2021 ம் தேதி காலை 11.00 மணிக்கு நான் மற்றும் ராஜேந்திரன் இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் சம்பவயிடத்திலிருந்து சுத்தி, இரும்பு கொரடு ஆகியவற்றை கைப்பற்றிய போது சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில்  சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

5) சம்பவ இடத்திலிருந்து வழக்கு சொத்து கைப்பற்றிய போது  தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –இல்லை

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.17 11:24:53 +0530

Judicial Magistrate No.II,
Mettur.